ජනාධිපති කාර්යාලය
# சனாதிபதி அலுவலகம்
# PRESIDENTIAL SECRETARIAT

எனது இல: PS/CSA/00/1/9/1 சுற்றறிக்கை இல: PS/SP/circular/28/2020

2020 ஆகஸ்ட் மாதம் 24 ஆந் திகதி

**சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்**

**சகல இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோருக்கு**

**பதவிகள் இல்லாதொழிந்த அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களுக்காக நிவாரணம் அளித்தல்**

அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரவை கலைக்கப்பட்டதன் காரணமாக தமது பதவிகளை இழந்த அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்களினதும் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களினதும் சேவையை மதிப்பீடு செய்யுமுகமாக விசேட சலுகைரீதியான மாற்றுவழியொன்றை ஒழுங்குபடுத்துவதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 20/1189/301/003 ஆம் இலக்க 2020.08.18 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்காக 2020.08.19 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதற்கமைய, இச்சந்தர்ப்பத்தில் பதவிகள் இல்லாதொழிந்த,

1. **அமைச்சரவை அமைச்சுக்களின் செயலாளர்களை-**

    i. செயலாளர்களது பிரமாணக்குறிப்பின் ஏற்பாடுகளின்கீழ் ஓய்வுபெறும்வரை அல்லது தமது முன்னைய சேவையின் பதவியொன்றுக்கு அல்லது வேறு தகுந்த பதவியொன்றுக்கு நியமிக்கப்படும்வரை அல்லது அரச சேவைகள், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு இணைப்புச் செய்வதற்கும்,

    ii. செயலாளர்களது பிரமாணக்குறிப்பின் ஏற்பாடுகளின்கீழ் ஓய்வுபெற எதிர்பார்க்காத உத்தியோகத்தர்களை 2020.08.31 ஆந் திகதிக்குமுன் தகுந்த பதவியொன்றில் நியமிப்பதற்கும், அவ்வாறு ஓய்வுபெறும் திகதி அல்லது தகுந்த பதவியொன்றில் நியமிக்கப்படும் திகதி அல்லது 2020.08.31 ஆந் திகதி ஆகிய திகதிகளில் முன்னராக அமையும் திகதிவரை தான் வகித்த பதவிக்கு அங்கீகரிக்கப்பட்டு அதுவரை பெற்றுக்கொண்ட சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் அனைத்தையும் வழங்குமாறு அரச சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை வழங்குவதற்கும்,

    iii. முன்னைய சேவைக்கு அல்லது பதவிக்குத் திரும்பிச் செல்லும் சந்தர்ப்பத்தில் தற்போது வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அரசாங்கக் கொள்கையின்கீழ் தீர்வை வரிச் சலுகையுடன்கூடிய 1 ஆம் வகுப்பின் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்காக பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 22/99 (XXXI) இன் (04) இல் காட்டப்பட்டுள்ள 03 வருட எல்லையை இவ்வுத்தியோகத்தர்கள் தொடர்பில் 01 வருடம்வரை குறைப்பதற்கும்,


ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01

දුරකථන / தொலைபேசி / Telephones: ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873

ෆැක්ස් / தொலைநகல் / Fax: ++ 94 11 2446657

ඊ-තැපැල / மின்-அஞ்சல் / e-mail: prsec@presidentsoffice.lk

2. **இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்-**

2020.06.03 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது எட்டப்பட்ட தீர்மானத்துக்கமைய அப்போதைய இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் தொடர்புடைய பதவியின் கடமைகள் மற்றும் கொவிட்-19 நிலைமையின்கீழ் இருந்த திடீர் கடமைகளை நிறைவேற்றிக்கொண்டு இராஜாங்க அமைச்சுச் செயலாளர் பதவிக்குரிய சம்பளங்கள், படிகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கான உரித்துகளைப் பெற்றுள்ளார்கள் என்பதைக் கவனத்தில்கொண்டு,

i. கட்டாயமாக ஓய்வுபெறும் வயதை அடைவதற்குள்ள மீதிச் சேவைக்காலம் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து உடன்முன்னராக ஒருவருடம் அல்லது அதைவிடக் குறையுமாயின் உத்தியோகத்தரின் தற்றுணிபின்படி அதுவரை தான் பெற்றுக்கொண்ட சம்பளங்கள், படிகள் மற்றும் சிறப்புரிமைகளுடன் அவர்கள் 60 வயதுவரை சேவையில் இருந்ததாகக் கருதி ஓய்வுபெறுவதற்கு அங்கீகாரம் வழங்குவதற்கும்,

ii. அமைச்சரவைத் தீர்மானத்தின்மூலம் வழங்கப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகளின்கீழ் ஓய்வுபெறும்வரை அல்லது தனது முன்னரான சேவையின் பதவியொன்றுக்கு அல்லது வேறு தகுந்த பதவியொன்றுக்கு நியமிக்கப்படும்வரை அல்லது அரச சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு இணைப்புச்செய்து, பதவிக்காக அங்கீகரிக்கப்பட்டு அதுவரை தான் பெற்றுக்கொண்ட சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் எல்லாவற்றையும் அவ்வமைச்சின்மூலம் 2020.08.31 ஆந் திகதி அல்லது மற்றுமொரு பதவிக்கு நியமிக்கப்படும் திகதி அல்லது அமைச்சரவைத் தீர்மானத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஓய்வுபெறும் திகதி ஆகிய திகதிகளில் முன்னராக அமையும் திகதிவரை வழங்குவதற்கும், 2020.08.31 ஆந் திகதிக்குமுன் அவ்வுத்தியோகத்தர்களைத் தகுந்த பதவிகளில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை வழங்குவதற்கும்,

iii. அவ்வாறு தகுந்த பதவியொன்றில் நியமிக்கப்பட்ட பின்னரேனும் இராஜாங்க அமைச்சுச் செயலாளர் பதவியில் சேவையாற்றிய காலவரையறையைக் கருத்திற் கொள்ளாது உரிய சம்பள அளவுத்திட்டத்தில் வைத்துக்கொள்வதற்கு அனுமதி வழங்குவதற்கும்,

iv. 06 மாத சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஆயினும் பதவிகள் இல்லாதொழிந்த இராஜாங்க அமைச்சுச் செயலாளர்கள் தொடர்பில் மட்டும் 25,000 ரூபா படியை வைத்துக்கொள்வதற்கும் அனுமதி வழங்குவதற்கும்

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகையால், மேற்கூறிய ஏற்பாடுகளுக்கமைய எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

பி.பீ.ஜயசுந்தர
சனாதிபதியின் செயலாளர்

பிரதிகள்:ஸ

1. பிரதம அமைச்சரின் செயலாளர்
2. அமைச்சரவைச் செயலாளர்
3. கணக்காய்வாளர் நாயகம்
4. ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

} தகவலுக்காகவும் தேவையான நடவடிக்கைக்காகவும்